**தலைப்பு 284 – வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வைப்புக் கணக்கின் இலக்கம் 6000-0-0-006-0-020-0 இன் கீழ் கிடைத்துள்ள ரூபா 851,604,272 தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் வைப்பு பெறுவனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் இந்த திணைக்களத்திற்கான விஷேட நிதியம் ஒன்றாக இருந்தமையினால் அதன் பெறுவனவுகளை வைப்பின் கீழ் உள்ளடக்காது தெளிவாக வேறாக காண்பிக்கப்பட்டுள்ளது. | திறைசேரி குறிப்பின் பிரகாரம் வைப்புக் கணக்கு இலக்கம் 6000-0-0-006-0-020-0 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளமையினால் வைப்பு பெறுவனவாக காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திறைசேரி குறிப்பின் பிரகாரம் ரூபா 39,534,166 தொகையான முற்பண பெறுவனவுகள் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 36,205,110 ஆக சீரக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 3,329,056 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | முற்பண பெறுவனவுகள் நிதிச் செயலாற்றல் கூற்றுக்காக ஏனைய செலவின தலைப்புக்களின் கீழ் கிடைத்த பெறுவனவுகள் கழிக்கப்பட்டதன் பின்னரே உள்ளடக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி திறைசேரி குறிப்புக்களுடன் இணக்கம் செய்து சரியான பெறுமதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் 04 வருமான குறியீடுகளின் கீழ் ரூபா 68,184,817 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளாக ரூபா 958,895,389 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏனைய 04 வருமான குறியீடுகளின் கீழ் ரூபா 107,291,117 தொகை மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் பெறுவனவாக ரூபா 851,604,272 ஆக ரூபா 958,895,389 ஏனைய பெறுவனவாக காண்பிக்கப்பட்டள்ளது. | ஏற்பாடுகளின் பிரகாரம் ஏனைய வருமான குறியீடுகளுக்குரிய பெறுவனவுகளின் சரியான பெறுமதியைக் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | திறைசேரி குறிப்புக்களின் பிரகாரம் ரூபா 55,690,601 தொகையான முற்பண செலுத்துகைகள் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 55,104,615 ஆக சீராக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 585,986 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏனைய செலவின தலைப்புக்களில் செலவிடப்பட்ட வரவு வைத்தல்கள் குறைக்கப்பட்டு நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டியிருந்தமையால் ரூபா 55,104,615 தொகை சரியானது என அறியத்தருகின்றோம். | நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கும் போது அதில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி மற்றும் திறைசேரி குறிப்புக்களுடன் இணக்கம் செய்து சரியான பெறுமதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 1,356,844,570 ஆக இருந்ததுடன், காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,286,728,503 ஆக சீராக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 70,116,067 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 1.286,728,503 தொகை சரியானதாக காண்பிக்கப்பட்டதுடன், அது ACA 2-II இல் தெளிவாக காண்பிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | ஏற்பாடுகளின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியான பெறுமதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் உதவித் தொகைகள் மற்றும் மாற்றல்களில் 03 செலவின விடயங்களில் ரூபா 37,950,008 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ரூபா 41,367,997 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 3,417,989 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 284-1-1-11-1205(11) செலவின விடயத்தின் 2020 இன் பாதீட்டு மதிப்பீட்டில் ஏனைய மீண்டெழும் செலவினமாக வகைப்படுத்தப்பட்டுள்ளமையினால் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதி உதவிகள் மற்றும் மாற்றல்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் ஏனைய 04 வருமானக் குறியீடுகளின் கீழ் ரூபா 68,184,817 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ரூபா 107,291,117 தொகை ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 26,609,847 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 107,291,116 சரியானது என அறியத்தருகின்றோம். | -மேற்படி- |
| (ஈ) திணைக்கள புத்தகங்களின் | அந்த வேறுபாடுகள் மாற்றல் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் ஏனைய திணைக்களங்களுக்கா செலவிடப்பட்ட செலவினம் ரூபா 5,187,802 ஆக இருந்த போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ரூபா 5,895,117 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 707,315 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பத்திரத்தின் மூலம் செய்யப்பட்ட கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் ரூபா 5,895,117 சரியானது என அறியத்தருகின்றோம். | |
| (உ) | திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் பௌதீக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீட்டு கைப்பற்றல்கள் ரூபா 73,212,742 ஆக இருந்ததுடன், காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் அது ரூபா 139,910,821 ஆனமையால் ரூபா 66,698,079 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ACA (2)(II) இன் 5 ஆவது நிரலின் படி மூலதன செலவினங்களின் கூட்டுமொத்தம் இதில் காண்பிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | -மேற்படி- |
| (ஊ) | திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் ரூபா 1,736,631,619 தொகையான வைப்பு செலுத்துகைகள் காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ரூபா 1,775,737,909 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 39,106,290 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மாற்றல் பத்திரங்களில் கணக்கீடு செய்யாமை கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | -மேற்படி- |
| (எ) | திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் முற்பணங்களை மீண்டும் அறவிடுதல் ரூபா 38,754,738 ஆக இருந்ததுடன், காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ரூபா 39,463,553 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 708,815 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அந்த வேறுபாடுகளாக கணக்காய்வினால் மாற்றல் பத்திரங்களில் கணக்கீடு செய்யப்படாமல் இருந்தமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | -மேற்படி- |

### 1.6.3 கட்டுநிதி சீராக்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி குறிப்புக்கள் மற்றும் திணைக்கள கணக்குகளின் பிரகாரம் வேறுபாடுகளை சீராக்கும் போது வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 39,106,290 தொகை குறிப்பிடப்படாதிருந்ததுடன், முற்பண பெறுவனவுகள் 364,137 தொகை குறைவாகவும், 05 செலவின தலைப்புக்களுக்குரிய ரூபா 707,315 தொகை அதிகரித்தும், முற்பண கொடுப்பனவுகள் ரூபா 3,086,237 தொகை அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள மீதி சரியானது என அறியத்தருகின்றோம். | நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கும் போது திறைசேரி குறிப்புக்களின் பிரகாரம் பெறுமதியிடப்பட வேண்டியிருந்ததுடன். திணைக்கள புத்தகத்தின் பிரகாரமான வேறுபாடுகள் காணப்படுமாயின் அந்த வேறுபாடுகள் கட்டுநிதி சீராக்கல் கணக்கில் சீராக்கப்பட வேண்டும். |

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின் உபகரண பதிவேடொன்று எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் அரசாங்கத்தின் கட்டிடங்களில் சகல மின்சார துணைப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பொருட் பதிவேட்டுப் புத்தகம் பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் 07 செலவின விடயங்களில் 23 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டில் சில செலவின விடயங்களில் சேமிப்புக்கள் இருந்தமை திணைக்கள கட்டுப்பாட்டிற்கு புறம்பான செயற்பாட்டுக் (கொவிட் 19 தொற்று நோயினால் ஏற்பட்ட நிலைமை போன்ற) காரணங்களினால் ஏற்பட்டது என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான திட்டமொன்றுடனும் முகாமைத்துவத்துடனும் உடைய மதிப்பீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் | கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட தன் பிரகாரம் எதிர்காலத்தில் நிதிக்கட்டுப்பாடுகள் தொடர்பான மீளாய்வொன்றைச் செய்து அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| (i) XLVIII ஆம் அத்தியாயத்தின் 28.3 ஆம் பிரிவு | பக்கமூண வனசீவராசிகள் அலுவலகத்திலும், குமார எல்லை பீட்டுவேயில் 02 உத்தியோகத்தர்களும் இலஞ்சம் பெற்றது தொடர்பாக குற்றமிளைத்தவராக நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தண்டனை விதிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் வழக்குத் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டதா என இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் விசாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மீள் நினைவூட்டலை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அந்த தகவல்கள் கிடைத்தன் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) XLVIII ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பந்தி | 20 ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான விசாரணைக்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | அதற்குரிய சகல விசாரணை உத்தியோகத்தர்களுக்கும் மீள் நினையூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், மீண்டும் மீள் நினைவூட்டல் அனுப்பப்பட்டு உரிய அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 101(3) | திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளில் பொருட் பதிவேட்டுப் புத்தகத்தை பேணிச் செல்கின்ற உத்தியோகத்தர்கள் தமது பொறுப்பில் காணப்படுகின்ற பொருட்களின் மீதி மற்றும் பொருட் பதிவேட்டு புத்தகங்களின் மீதி என்பவற்றை பகுப்பாய்வு செய்து பற்றாக்குறை மற்றும் மிகைகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக களஞ்சியத்தினால் பல்வேறு பிரிவுகளுக்கும் விநியோகிக்கப்பட்ட பொருட்களில் ரூபா 3,019,132 பெறுமதியான 46 விடயங்களின் பற்றாக்குறையொன்று காணப்படுகின்றமை கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக இருப்பு மெய்மெய்யாய்வின் போது அவதானிக்கப்பட்டது. | விநியோகித்தல் கட்டளைகள் மற்றும் பொருட் பதிவேட்டு புத்தகங்களை பரீட்சித்து உள்ளடக்கப்படாத பொருட்கள் மற்றும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள பொருட்கள் தொடர்பாக பௌதீக ரீதியில் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 3,937,613 தொகையான பொது வைப்புக் கணக்கின் மீதி தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வைப்புக்களுக்குரிய கொடுப்பனவிற்காக தேவையான அறிக்கைகளில் உள்ள குறைபாடுகளினால் நிறுத்தி வைத்தல் பணக் கொடுப்பனவு தாமதமடைகின்றது என அறியத்தருகின்றோம். | -மேற்படி- |
| (iii) | நிதிப் பிரமாணம் 751(1) | 2016 சனவரி 01 ஆம் திகதி முதல் 2020 திசெம்பர் 31 வரையான காலத்தில் பிரதான களஞ்சியத்தில் இருந்து விநியோகிக்கப்பட்ட ரூபா 10,332,963 பெறுமதியுடைய 133 பொருள் விடயங்கள் மற்றும் ரூபா 3,597,685 பெறுமதியான 138 வானொலி தொடர்பாடல் உபகரணங்கள் என்பன ஒவ்வொரு பிரிவுகளுக்கும் உரிய பொருட் பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை . | தற்போது வரையில் ரூபா 9,113,642 பெறுமதியான பொருட்களை கண்டறிவதற்கு முடியுமாக இருந்ததுடன், மிகுதி பொருட்கள் தொடர்பாக மேலும் தொடர்ந்தும் பரீட்சிக்கப்படுகின்றது. யாராவது உத்தியோகத்தர் ஒருவர் மோசடியான நடவடிக்கைகள் செய்திருந்தமை வெளிப்படுத்தப்படுமாயின், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | -மேற்படி- |
| (iv) | நிதிப் பிரமாணம் 756 | ஆண்டின் இறுதியில் பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கடல்சார் பிரிவில் பொருள் மெய்மெய்யாய்வு மற்றும் திட்டமிடல் பிரிவில் ESCAMP செயற்திட்டத்திற்குரிய உபகரணங்களுக்காக பொருள் மெய்மெய்யாய்வு 2017 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடல்சார் பாதுகாப்பு பிரிவிற்காக தனியான பொருள் மெய்மெய்யாய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், இதன் பின்னர் அந்த பிரிவில் மெய்மெய்யாய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | -மேற்படி- |
| (v) | நிதிப் பிரமாணம் 880 | அரசாங்கத்தின் பொருள் மற்றும் உபகரணங்களை கையேற்பதற்கோ அல்லது பொறுப்பில் உள்ள உத்தியோகத்தரிடம் இருந்து பிணை வைத்தலோ மேற்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்காதிருந்த உத்தியோகதர்களுக்காக பிணையை வைப்பச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து தற்போது பேணப்படுகின்ற பிணைவைப்பு பதிவேட்டையும் நாளது வரையாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) 2014 மார்ச் 14 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தி. | மூலதன வடிவில் உள்ள பொருள் களஞ்சியத்தில் இருந்து விநியோகிப்பதற்காக பணிப்பாளர் நிதியிடம் இருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக 180 விநியோகக் கட்டளைகளில் இருந்து 248 பொருள் விடயங்கள் பணிப்பாளர் நிதியிடம் இருந்து அங்கீகாரம் இன்றி விநியோகிக்கப்பட்டிருந்தது. | இதன் பின்னர் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்(நிதி), பிரதி பணிப்பாளர் (நிதி) மற்றும் உதவி பணிப்பாளர் (நிதி) என்பவர்களின் அங்கீகாரத்துடன் பொருட்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 முற்பணங்களை வழங்குதலும் தீர்த்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகளின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய பணம் அறவிட வேண்டிய முறை தொடர்பாக காண்பிக்கப்பட்டிருந்த போதும் மரணமடைந்த, ஓய்வு பெற்றுச் சென்ற, சேவையை விட்டு விலகிய மற்றும் வேலை நீக்கம் செய்யப்பட்ட 24 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய 05 வருடங்களை விஞ்சிய ரூபா 973,648 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | கடன் மீதியை அறவிடல் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட 27 பணிகளுக்காக ரூபா 23,987,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும், அவை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | Covid தொற்று நோய் நிலைமையின் காரணமாக வனசீவராசிகள் ஒதுக்கத்தில் வெளிநபர்கள் உள்நுழைவதற்கு அனுமதி வழங்காமையின் காரணமாக இந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது என அறியத்தருகின்றோம். | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட பணிகளை பூர்த்தி செய்தல் வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட 22 செயற்திட்டங்களின் பௌதீக செயல்முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | Covid தொற்று நோய் நிலைமையின் காரணமாக பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது என்பதை அறியத்தருகின்றோம். | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

ஷ

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டின் போது யால தேசிய பூங்காவிற்காக Ticket Wending Machine 02, Mini PC 03 மற்றும் 19'' Mini PC Tray 2U 01 என்பன ரூபா 2,205,526 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பயனற்று காணப்பட்டது. | Mini PC 03 மற்றும் எலக்ரோனிக் துணைப் பாகங்கள் மற்றும் இயந்திரங்களை நாளதுவரையாக பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சொத்துக்களை ஆக்க பூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 02 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களுக்குரிய ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட சொத்துக்கள் பதியப்பட்ட பொருட் பதிவேட்டு புத்தகம் தொலைந்து போயிருந்தது. இதன் காரணமாக கடன் உதவியின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களில் கிடைக்கின்ற சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு நலிவான நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இந்த செயற்திட்டத்தின் இறுதியில் செயற்திட்டம் மூலம் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த பொருள் மீதிகள் பிரதான அலுவலக களஞ்சியத்தின் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தற்போது உரிய பதிவேட்டை கண்டறிவதற்கு முடியாதிருந்தமையால் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்து அது தொடர்பாக அறிக்கையிடப்படும். | செயற்திட்டங்களில் இருந்து கிடைக்கின்ற சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பான உள்ளக கட்டுப்பாடு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிழக்கு வலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட 07 மின்சார வேலிகளில் ரூபா 1,546,000 தொகையான மின்சார உபகரணங்கள் களவாடப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையொன்று செப்டம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முத்துராஜவல சுற்றாடல் முறைமையில் 1285 ஹெக்டேயர் நில அளவொன்று 1996 இன் 947/13 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தின் மூலம் புனித பூமியாக வர்த்தமானி இடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த புனித பூமியின் எல்லையை அடையாளமிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | நில அளவையாளர் திணைக்களத்திற்கு பணம் செலுத்தப்பட்டு புனித பூமியின் எல்லை யாவற்றையும் மீண்டும் முறைமைபடுத்தப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இந்த பணிகள் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்படும் என குறிப்பிடுகின்றோம். | புனித பூமி எல்லையை சரியாக அடையாளமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மற்றும் 2020 ஆம் | இதன் காரணமாக யானை | மனித |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளின் போது மின்சார வேலி நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பிற்காக செலவிடப்பட்ட செலவினம் முறையே ரூபா 197,983,635 மற்றும் ரூபா 257,521,334 ஆக இருந்ததுடன், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மொத்த மின்சார வேலிகளின் நீள அளவு 4,756 கிலோ மீற்றர் ஆகும். எவ்வாறாயினும் கடந்த 05 வருடங்களில் ஏற்பட்ட யானை மரணங்கள், மனித மரணங்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை கவனத்தில் கொள்ளும் போது மின்சார வேலி நிர்மாணிக்கப்பட்டு யானை மனித பிரச்சினைகள் குறைவடைந்திருந்தமையை அவதானிக்க முடியவில்லை. | ஏற்படுவது யாதெனில் காட்டு யானை மனித பிரச்சினைகள் காணப்படுகின்ற பிரதேசங்களில் பொருளாதார ரீதியில் செயற்படும்நிலை விரைவாக அதிகரிக்கின்றமை மற்றும் அதன் காரணமாக வருகின்ற காட்டு யானைகள் நடமாடுகின்ற வீதிகளில் பாதிப்பினை ஏற்படுத்துதல் மற்றும் ஒதுக்கப் பிரதேசங்களுக்கு வெளியே ஏற்படுகின்ற பிரச்சினைகளில் சுற்றிவளைப்பதற்காக ஈடுபடுத்தப்பட்ட திட்டங்களும் தந்திரோபாயங்கள் சரியான நியமத்துடன் அமுல்படுத்துவதற்கு இடையூறுகள் ஏற்பட்டிருந்தமை போன்ற விடயங்களின் காரணமாக இந்த நிலைமை எழுந்திருந்தது. | பிரச்சினைகளை குறைப்பதற்காக முறையான தந்திரோபாயமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கடுவுல்ல தேசிய பூங்காவில் ஏற்பட்ட நுழைவுச்சீட்டு பத்திர மோசடி மற்றும் அம்பாந்தோட்டை வனத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புக்களில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரை நிறுத்தி வைக்கும் பொறுப்பில் இருந்த போது தப்பியோடியமை போன்ற இரண்டு சம்பவங்களுக்கும் உரிய ஆரம்ப விசாரணை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த சம்பவங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணையின் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | ஆரம்ப விசாணைகளில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 செப்டம்பர் 04 ஆம் திகதி முதல் 2017 செப்டம்பர் | இந்த சம்பவத்திற்குரிய பூரண அறிக்கை | விரைவாக இறுதி அறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | 07 ஆம் திகதி வரை கெல்வெஸ்லேன்ட் தேசிய பூங்காவின் வருமான கட்டணம் வங்கியிலிடப்படாது பிழையானதாக பயன்படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணையின் இடைக்கால அறிக்கை 2019 ஏப்ரல் 05 ஆம் திகதி ஆரம்ப விசாரணை உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையலும் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குமாறு ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர்களுக்கு மீள் நினைவூட்டல் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. மீண்டும் இந்த விசாரணை ஐயங்களில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு மீள் நினைவூட்டல் கடிதத்தை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2012 சனவரி 06 ஆம் திகதிய அமப/11/2299/549/031 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் யானைகளில் இருந்து ஏற்படுகின்ற இழப்புக்களை குறைப்பதற்காக நிர்மாணிக்கப்படுகின்ற மின்சார வேலியை பராமரிப்பதற்கு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்த சேவைகளை ஆக்கபூர்வமாக பெற்றுக் கொள்வதற்காக மின்சார வேலி பராமரிப்பிற்காக ஏற்பட்ட செலவினங்களை முறையான பிரகாரம் முகாமைத்துவம் செய்வதற்காகவும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கும் இடையே குறித்த இணக்கப்பாட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2012 ஆம் ஆண்டில் புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு கையொப்பமிடல் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், வனசீராசிகள் திணைக்களம் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களம் போன்றவை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான ஆரம்ப தகவல்கள் பரிமாற்றிக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கும் இடையே உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

--------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சிரேஷ்ட மட்டத்தில் 11 வெற்றிடங்களை உள்ளடக்கிய திணைக்களத்தின் ஒட்டு மொத்த பதவியணியில் 367 வெற்றிடங்கள் காணப்பட்டன. | தற்போது வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |